16.03.16

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## "இந்திய வேளாண் துறை 5 சதவீதம் வளர்ச்சி பெறும்'

ஆண்டுக்கு 5 சதவீதம் வளர்ச்சி காணும் திறன் இந்திய வேளாண் துறைக்கு உள்ளது என வேளாண் பொருளாதார வல்லுநர் அசோக் குலாட்டி தெரிவித்தார்.

ஒடிஸாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர் இதுகுறித்து மேலும் கூறியதாவது:

வேளாண் துறையின் தற்போதைய வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு 3.6 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக உள்ளது. எனினும், ஆண்டுக்கு 5 சதவீதம் வளர்ச்சி காணும் திறன் இந்திய வேளாண் துறையிடம் உள்ளது. வேளாண் துறை வளர்ச்சிக்கும், வறுமைக்கும் இடையே நேரடித் தொடர்புள்ளது. வேளாண் துறை வளர்ச்சி விகிதம் தொடர்ந்து அதிகரிக்கும் நிலையில், நாட்டில் வறுமையின் விகிதம் மிக வேகமாகக் குறையும்.

இந்திய பொருளாதாரம் "பிரமிடு' போன்றது. அதில் அடிப்பகுதியாக வேளாண் துறை அமைய வேண்டும். நடுப்பகுதி தயாரிப்புத் துறையாகவும், மேல் பகுதி சேவைத் துறையாகவும் இருக்க வேண்டும். இதுவே, நாட்டின் நீடித்த வளர்ச்சிக்கு அடிப்படையான தேவை. வேளாண் துறை மாநில அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது என்றாலும் கூட அதில் வளர்ச்சியை ஊக்குவிக்க மத்திய அரசு உதவ வேண்டும். முந்தைய பசுமைப் புரட்சியும், வெண்மைப் புரட்சியும் மத்திய அரசுத் திட்டங்களே. நாட்டின் உணவு மற்றும் ஊட்டச் சத்துப் பாதுகாப்புக்குப் பங்களிப்பைச் செய்யும் வேளாண் துறையில் சீர்திருத்தங்களை கொண்டு வர மத்திய அரசு திட்டமிட வேண்டும் என்று அசோக் குலாட்டி கூறினார்.

**ஈடன் நாற்றுப் பண்ணையில் மூலிகை சாற்றைக் கொண்டு குளோனிங் நாற்றுகள் உருவாக்கம்**

நாற்று உற்பத்தியில் முன்னணி வகிக்கும் மேட்டுப்பாளையம் ஈடன் நாற்றுப் பண்ணையில் மூலிகை சாற்றைக் கொண்டு குளோனிங் நாற்றுக்களை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளனர்.

மூலிகை சாற்றைக் கொண்டு குளோனிங் நாற்று உற்பத்தி முறை குறித்து பண்ணை நிறுவனர் ஈடன் எஸ்.ராஜரத்தினம் கூறியது:

எங்கள் நாற்றுப் பண்ணையில் மல்லிகை, முல்லை, அரளி, ரோஸ், காக்கடா, எலுமிச்சை, கொய்யா, மாதுளை போன்ற விளைச்சல் உறுதி செய்யப்பட்ட, தரமான நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. ஆரம்ப கட்டத்தில் வேர் தூண்டும் பவுடரை (ஐபிஏ) கொண்டே இந்த நாற்றுக்களை உற்பத்தி செய்து வந்தோம். ஆனால் மர நாற்றுகளுக்கு அங்கக சான்று பெற்றதையடுத்து ரசாயன கலப்பின்றி அங்கக முறையில் குளோனிங் நாற்றுகளையும் உருவாக்க முடிவு செய்தோம். தற்போது மூலிகை சாற்றைக் கொண்டு தண்டுகளில் வேர்களைத் தூண்டி குளோனிங் நாற்றுகளை உற்பத்தி செய்யும் முறையை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளோம். இந்த முறையில் தாய்ச்செடிகளுக்கு இணையான தரத்தில், பல லட்சம் நாற்றுகளை ஒரே நேரத்தில் உருவாக்குவது சாத்தியமாகும்.

வணிக ரீதியாக மூலிகை சாற்றை உபயோகப்படுத்தி, குளோன் நாற்றுகளை உற்பத்தி செய்வது, இதுவே முதல் முறை. தற்போது இந்தப் பண்ணையில் அனைத்து நாற்றுக்களும் ரசாயன ங்களை சேர்க்காமல் 100-சதவீதம் அங்கக முறைப்படி உருவாக்கப்படுகிறது. அத்துடன் இங்கு விற்பனைக்கு உள்ள அனைத்து நாற்றுகளுக்கும் அங்கக சான்று பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது என்றார்.

தொடர்ந்து, இஸ்காப் சான்றளிப்பு நிறுவனம் சார்பில் இப்பண்ணயில் மேற்கொள்ளப்பட்ட 2-ஆம் கட்ட ஆய்வின்போது, இஸ்காப் ஆய்வுக் குழுத் தலைவர் அய்யாசாமி, தேசிய அங்கக வேளாண் மைய உதவி இயக்குநர் கோஸ், இந்தியன் மஸ்ரூம் பவுண்டேஷன் அமைப்பு தலைவர் பிரகாசம் உள்ளிட்டோர் அடங்கிய குழு பங்கேற்று, மூலிகை சாற்றை

கொண்டு குளோனிங் நாற்று உற்பத்தி முறையை ஆய்வு செய்தது. இறுதியில் அதற்கான அங்கக சான்றையும் வழங்கியது.

## பருவ நிலை மாற்றம் எதிரொலி: பர்லியாறு பழப் பண்ணையில் துரியன் பழம் விளைச்சல் குறைவு

குன்னூரில் ஏற்பட்டுள்ள பருவ நிலை மாற்றம் காரணமாக பர்லியாறு பழப் பண்ணையில் துரியன் பழம் விளைச்சல் குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

குன்னூர், மேட்டுப்பாளையம் மலைப் பாதையில் உள்ள பர்லியாறு அரசு தோட்டக்கலையின் பழப் பண்ணை உள்ளது. இங்கு பலா, ஜாதிக்காய், எலுமிச்சை, துரியன், மங்குஸ்தான், லாங்சாட், மலேயன் ஆப்பிள், வெல்வெட் ஆப்பிள் உள்ளிட்ட பழ வகை மரங்கள் உள்ளன.

இப்பண்ணையில், 34 துரியன் பழ மரங்கள் உள்ளன. குழந்தை பாக்கியம் கிடைக்கும் எனக் கூறப்படும் இந்த துரியன் பழம் ஆண்டு தோறும் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் கிடைக்கும். அதேபோல, பிப்ரவரி, மார்ச் மாதங்கள் 2-ஆவது சீஸன் காலம் ஆகும். இந்தக் காலக்கட்டத்தில் உள்ளூர்வாசிகள் மட்டுமின்றி சுற்றுலாப் பயணிகளும் இந்த அரியவகைப் பழத்தை பெறுவதற்கு முன் பதிவு செய்து காத்திருப்பது வழக்கம்.

கடந்த ஆண்டு ஒரு கிலோ துரியன் பழம் ரூ. 800-க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால், வெளிச்சந்தைகளில் ரூ. 1,500 வரை விற்கப்பட்டது.

மேலும், கடந்த ஆண்டு இறுதியில் இங்குள்ள மரங்களில் பூ பூத்த நிலையில், தொடர் மழைக் காரணமா அவை அனைத்தும் உதிர்ந்தன. இதனால் 2-ஆவது சீஸனுக்கு விளைச்சல் முற்றிலும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக வெளி மாநிலங்களில் இருந்து துரியன் பழங்களை இங்குள்ள வியாபாரிகள் கொண்டு வந்து விற்பனை செய்து

வருகின்றனர். பர்லியாறு பண்ணையின் துரியன் பழம் கிடைக்காததால் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

## பெரிய நாகலூரில் கடலை சாகுபடி பண்ணைப் பள்ளி

அரியலூர் அருகேயுள்ள பெரிய நாகலூர் கிராமத்தில் வேளாண் துறை சார்பில் அட்மா திட்டத்தின்கீழ் கடலை சாகுபடி குறித்து பண்ணைப் பள்ளி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அரியலூர் வேளாண் உதவி இயக்குநர் ரெ. மோகன் தலைமை வகித்து பேசினார். அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் ந. பழனிசாமி, கடலை பயிருக்கான இரகத் தேர்வு, விதை நேர்த்தி செய்தல், பூச்சிக் கட்டுப்பாடு, நோய் கட்டுப்பாடு, கடலையில் எண்ணெய் வளம் அதிகம் வருவதற்கு கையாளப்படும் தொழில்நுட்ப உக்திகளை எடுத்துரைத்தார்.

பின்னர் கடலை பயரில் காணப்படும் இலைசுருட்டுப் புழு, காய்ப்புழு, தண்டுப்பூச்சி, இலைப்பேன், செம்பேன் ஆகியவற்றை இனங்கண்டறிதல், அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து செயல்விளக்கம் அளித்தார்.

இப்பண்ணை பள்ளியில் கலந்துகொண்ட விவசாயிகள் விஆர்ஐ- 2 கடலையின் சிறப்பம்சம், கடலையில் அதிக

விழுதுகள் வருவதற்கு மேற்கொள்ள வேண்டிய உர மேலாண்மை, கோடை உழவு, கடலை பயிர் சாகுபடிக்கு எவ்வகையில் பயன் தரும் என்பன போன்ற வினாக்களை எழுப்பினர். ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சு.வாசுகி, சுந்தரமூர்த்தி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## குமரி மாவட்டத்தில் கோடை மழை: திற்பரப்பில் 34 மி.மீ. பதிவு

குமரி மாவட்டத்தில் கோடை மழை பெய்யத் தொடங்கியுள்ளது. அதில், திற்பரப்பு பகுதியில் அதிகபட்சமாக 34 மி.மீ. மழை செவ்வாய்க்கிழமை பதிவானது.

இம்மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக மலையோரப் பகுதிகள் மற்றும் அணைப்பகுதிகளில் கோடை மழை பெய்து வருகிறது.

பாசனப்பணிகள் நிறைவடைந்த நிலையில் அனைத்து அணைகளும் மூடப்பட்டுள்ளன. கோதையாறு மின் நிலையத்திலிருந்து தண்ணீர் வெளியேறி வருவதாலும், சில நாள்களாக பெய்துவரும் மழையாலும் பேச்சிப்பாறை உள்ளிட்ட அணைகளில் நீர்மட்டம் சற்று உயர்ந்துள்ளது.

செவ்வாய்க்கிழமை நிலவரப்படி பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 25.20 அடியாகவும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 61.85 அடியாகவும், சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 5.02 அடியாகவும், சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 5.12 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 19.20 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 48.39 அடியாகவும் இருந்தது.

மழை அளவு (மில்லி மீட்டரில்): திற்பரப்பு 34.4, பேச்சிப்பாறை 21, சிற்றாறு 1 இல் 19.2, சிற்றாறு 2 இல் 12.4 என்ற அளவில் மழை பதிவானது.

இந்நிலையில் மலையோரப் பகுதிகள் உள்பட மாவட்டம் முழுவதும் மழை மேகம் சூழ்ந்து காணப்பட்டது. பேச்சிப்பாறை உள்ளிட்ட அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் லேசான சாரல் மழை பெய்தது.

கோடை மழை பெய்யத் தொடங்கியுள்ளதால், வெயின் தாக்கம் சற்று குறைந்து மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும் கரையோரங்களில் நடவு செய்திருந்த வாழை உள்ளிட்ட பயிர்களுக்கு தண்ணீர் இறைத்து வந்த விவசாயிகளும் சற்று ஆறுதலடைந்துள்ளனர்.

**கோவை விவசாய பல்கலைக்கழகத்தில் பணி**

கோவையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தில் காலியாக உள்ள பணியிடங்கள் நேர்முகத் தேர்வின் மூலம் நிரப்பப்பட உள்ளன. இதற்கு தகுதயும் விருப்பமும் அன்றைய

தினங்களில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பணி: Library Helper - 01**

சம்பளம்: மாதம் ரூ.6,000

நேர்முகத் தேர்வு நடைபெறும் தேதி: 21.03.2016

**பணி: Driver**

காலியிடங்கள்: 01

சம்பளம்: மாதம் ரூ.9,000

நேர்முகத் தேர்வு நடைபெறும் தேதி: 21.03.2016

**பணி: Security Persons**

காலியிடங்கள்: 04

சம்பளம்: மாதம் ரூ.600

நேர்முகத் தேர்வு நடைபெறும் தேதி: 22.03.2016

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்: The Dean, Agriculture College & Research Institute, STAMIN Campus, Kudumiyanmalai.

மேலும் விண்ணப்பிக்கும் முறை, கட்டணம், பணி அனுபவம் போன்ற முழுமையான விவரங்கள் அறிய www.tnau.ac.in என்ற இணையதளத்தை பார்க்கவும்.

## அட்மா திட்டம் சார்பில் விவசாயிகளுக்கு சிறுதானிய சாகுபடி பயிற்சி

அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு சிறுதானிய சாகுபடி குறித்த பயிற்சித் திட்டம் மாவட்ட அளவில் நிலக்கோட்டை வேளாண்மை அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் அட்மா திட்டம் சார்பில் சிறுதானிய சாகுபடி தொடர்பான பயிற்சி திட்டத்துக்கு, நிலக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் கா.முருகன் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் மு,விஜயன் முன்னிலை வகித்தார். இம்முகாமில் சிறுதானிய பயிர்களுக்கு நுண்ணூட்ட நிர்வாகம், நோய் நிர்வாகம் பற்றியும், அதன் பயன்பாடுகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இம்முகாமுக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட மேலாளர் ஐ.சிங்கத்துரை மற்றும் ஜெயசுப்பிரமணி ஆகியோர் செய்திருந்தனர். மாவட்ட அளவிலான பயிற்சி முகாமில் நிலக்கோட்டை சுற்றுப்புறப் பகுதி விவசாயிகள் 40 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## ஆண்டிபட்டியில் வேளாண்மை ஆணையர் ஆய்வு

ஆண்டிபட்டி அருகே பொம்மிநாயக்கன்பட்டியில் வேளாண்மைக் துறை மூலம் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பயிர்வளர்ப்பு, பசுமாடுகள் வளர்த்தல், வெள்ளாடுகள் வளர்த்தல், நாட்டு கோழிகள் பராமரிப்பு, பண்ணை குட்டைகள் அமைத்தல் மற்றும் மண்புழு உரக்கூடம் அமைக்கும் பணிகளை தமிழ்நாடு வேளாண்மை துறை ஆணையர் ராஜேந்திரன் திங்கள்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது வேளாண்மை உதவி இயக்குநர் தியாகராஜன், உதவி வேளாண் அலுவலர் தியாகராஜன்,வேளாண் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

**உவர் நீரில் ஒருங்கிணைந்த பண்ணையம்!**

வானம் பார்த்த பூமியில் உவர் நீரில் ஒருங்கிணைந்த பண்ணை விவசாயத்தின் மூலம் ஆண்டுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் ஓசையின்றி சம்பாதிக்கிறார், ராமநாதபுரம் வழுதூரைச் சேர்ந்த விவசாயி த.சிவா. பிளஸ் 2, கம்ப்யூட்டர் பயிற்சி முடித்து 2000ல் துபாய் சென்றேன். டிரைவராக 10 ஆண்டு வேலை செய்துவிட்டு ஊர் திரும்பினேன். மீண்டும் அங்கு செல்ல விருப்ப மில்லை. சொந்த கிராமத்திலேயே முன்னேற விரும்பினேன். எனது மூன்றரை ஏக்கர் நிலமான வறண்ட பூமியில் உவர் நீரில் இயற்கை விவசாயத்தின் மூலம் சாதிக்க முடிவு செய்தேன்.

ராமநாதபுரம் தோட்டக்கலை துறை, குயவன்குடி வேளாண் அறிவியல் மைய அதிகாரிகளை தொடர்பு கொண்டேன். அவர்க ளுடைய ஆலோசனையின் பேரில் காய்கறி, கீரை, தேனீ, மீன் வளர்ப்பில் ஈடுபட்டேன். எங்கள் வீட்டில் வளரும் ஆடு, மாடு, கோழிகளின் கழிவுகளில் இருந்து இயற்கை உரம் தயாரித்தேன். இதனால் காய்கறி, கீரைகள் சுவையாகவும் பசுமை மாறாமலும் உள்ளன. 15 தென்னை மரங்கள், பங்கனபள்ளி, செந்தூரன், கல்லாமை உட்பட 25 வகை ஒட்டு மாமரங்கள், யாழ்ப்பாணம், நாட்டு வகைகளைச் சேர்ந்த 100 முருங்கை மரங்கள், 5 வகை கீரைகள் சாகுபடி செய்துள்ளேன். தேங்காய் மூலம் 45 நாளுக்கு ஒரு முறை ரூ.4,500 மா மற்றும் முருங்கை மரங்களிலிருந்து ஆண்டுக்கு தலா ரூ.12 ஆயிரம், தேன் மூலம் ஆண்டுக்கு ரூ.18ஆயிரம், கீரைகளில் இருந்து 6 மாதத்திற்கு ஒருமுறை ரூ.6 ஆயிரம், கோழி முட்டையிலிருந்து தினமும் ரூ.60, மீன்வளர்ப்பு மூலம் ஆண்டுக்கு ரூ.24 ஆயிரம், பசும்பால் மூலம் கணிசமான வருவாய் கிடைக்கிறது. பரண் மேல் ஆடு வளர்க்கவும் மண்புழு உரம் தயாரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளேன். செயற்கை விவசாயத்தில் ஆண்டு முழுவதும்

வருமானம் ஈட்ட முடியாது. காய்கறி சாகுபடியை தனியாக செய்தால் நிரந்தர வருமானம் கிடைக்கும். இயற்கை விவசாயத்தில் மட்டுமே நல்ல லாபம் அடைய முடியும். அனைத்து விவசாயிகளும் இயற்கை விவசாயத்திற்கு திரும்ப வேண்டும். இயற்கை விவசாயத்தில் ஆர்வமுடையோருக்கு அரசின் சலுகைகள் தாமதமின்றி கிடைக்க வேண்டும், என்றார். தொடர்பு கொள்ள 94892 74427

**-ஆர்.முருகன், ராமநாதபுரம்.**

## வறட்சியை தாங்கும் உத்திகள்

மானாவாரி சாகுபடியில் மழைப்பொழிவு, மழையளவை பொறுத்து பயிர் விளைச்சலும், உற்பத்தியும் மாறுபடுகிறது. அறிவியல் ரீதியான நவீன தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் விளைச்சல், உற்பத்தியை அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளன.

முன்பருவ வறட்சி என்பது பருவமழை தாமதமாக துவங்குவதாலும், மழை துவங்கி விதைத்தபின் 3 முதல் 5 வாரங்களுக்கு ஏற்படும் இடைவெளியில் உண்டாவது. பிந்தைய மழைக்கான பயிர் ரகங்களை தேர்வு செய்து மறு விதைப்பு செய்யலாம். விதையை கடினப்படுத்தி விதைக்க வேண்டும். மழைநீர் சேமிப்புக்கான பகுதி பாத்திகள், வரப்பும் அமைத்தல்; ஆழ்சால் அகலபாத்தி, பார்களில் விதைத்தல் போன்ற முறைகளை கையாளலாம். மத்திய கால வறட்சி என்பது, மானாவாரி பருவமழை காலத்தில் பயிர் வளர்ச்சியின் இடையே, 2 முதல் 3 வாரங்களுக்கு மழை பெய்யாததால் ஏற்படும் வறட்சி. நிலப்போர்வை அமைத்தல், மேல் மண்ணை கிளறி விடுதல், இலைமேல் ரசாயன நீராவி தடுப்பான்களை தெளித்தல் மூலம் வறட்சியை குறைக்கலாம். இறவையில் சாகுபடி செய்யப்படும் கரும்பில் எக்டேருக்கு 750 லிட்டர் தண்ணீரில் 12.5 கிலோ கயோலினை கலந்து தெளிப்பதன் மூலம் இலைகள் வழி நீர் ஆவியாவதை தடுக்கலாம். பிந்தைய கால வறட்சி என்பது, பயிர் வளர்ச்சியின் பிந்தைய பருவத்தில் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே பருவமழை பெய்வது. அல்லது இப்பருவத்தில் 2 - 3 வாரங்களுக்கு மேல் மழை இல்லாதிருப்பதால்

ஏற்படும் வறட்சி. இதற்கு நீராவி தடுப்பான்களை தெளித்தல்; பயிர்களை தீவனமாக அறுவடை செய்தல்; பண்ணை குட்டைகளில் சேமிக்கப்பட்ட நீரைக் கொண்டு தற்காப்பு நீர்ப்பாசனம் செய்யலாம். வெட்டிவேர், கொழுக்கட்டை புல், சூபாபுல், வேலிமசால், எலுமிச்சை புல் ரகங்களை தாவர அரண்களாக வளர்த்து நீரை மண்ணுக்குள் ஊடுருவ செய்யலாம்.
**- பே. இந்திராகாந்தி, துணை இயக்குனர், -மூ.சரஸ்வதி, உதவி இயக்குனர்,நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், மதுரை.**

**நோய்கள்... நுண்ணுயிரிகள்!**

சூடோமோனாஸ் புளூரசன்ஸ், டிரைகோடெர்மா விரிடி போன்ற நுண்ணுயிரிகளை பயன்படுத்தி பயிர் நோய்களை கட்டுப்படுத்தலாம். மண்வழி பரவும் நாற்று அழுகல், வேர் அழுகல் மற்றும் வாடல் நோய்களை சூடோமோனாஸ் புளூரசன்ஸ் கட்டுப்படுத்துகிறது. விதையின் மேற்புறம், வேர், வேர்அடிமண் போன்ற பாகங்களில் நுண்ணுயிரிகள் வளர்ந்து பயிர்களில் வளர்ச்சியை தூண்டுவதன் மூலம் நோய்களை கட்டுப்படுத்துகிறது. இதனால் பயிர்களின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது.
ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் சூடோமோனாஸ் கலந்து விதைநேர்த்தி செய்யலாம். நடவுக்கு முன் நாற்றங்காலில் இருந்து பிடுங்கிய நாற்றுக்களின் வேர்களை, சூடோமோனாஸ் கரைசலில் ஒரு மணி நேரம் ஊறவைத்து நடவேண்டும். நடவு முடித்து 30 நாட்கள் கழித்து, எக்டேருக்கு இரண்டரை கிலோ சூடோமோனாஸ் வீதம், 50 கிலோ சாண எரு அல்லது மண்புழு உரம் அல்லது மணலுடன் கலந்து வயலில் தூவ வேண்டும்.

உணவு மற்றும் வாழிடத்திற்கு நோய்க் காரணிகளுடன் போட்டியிடுவதன் மூலம், டிரைகோடெர்மா விரிடி நுண்ணுயிரி யானது, பயிர்களின் நோயை கட்டுப்படுத்துகிறது. நொதிகள் மற்றும் எதிர்உயிர்க் காரணிகளை சுரந்து, நோய் காரணிகளை அழிக்கிறது. பயறு, எண்ணெய் வித்துக்கள், காய்கறி, மலர், பழப்பயிர்களில் நோயை கட்டுப்படுத்த ஒரு

கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் கலந்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். **- க.மனோன்மணி, உதவி பேராசிரியர், பயிர் நோயியல் துறை, வேளாண் அறிவியல் மையம், விவசாய கல்லூரி, மதுரை.**

## வெயிலின் தாக்கம் அதிகரிப்பு நுங்கு விற்பனை தொடக்கம்

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரத்தில் வெயிலின் தாக்கம் அதிகரிதுள்ள நிலையில், நுங்கு விற்பனை தொடங்கியது. ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள கிராமப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக அக்னி நட்சத்திர காலத்தை நினைவூட்டும் வகையில் சூரியனின் சுட்டெரிக்கும் வெயில் கொளுத்தியது. நண்பகல் நேரத்தில் வெளியே செல்லா முடியாதபடி வெப்பம் அதிகமாக இருந்தது. இந்நிலையில் குளிர்ச்சியை தரக்கூடிய தர்பூசணி, வெள்ளரிக்காயம், இளநீர் மற்றும் பழரசங்கள், கம்மங்கூழ் ஆகியவற்றை தேடி மக்கள் படையெடுக்க தொடங்கினர். இவ்வகையில் நுங்கும் தற்போது விற்பனைக்கு வரத் தொடங்கிஉள்ளது. கேதையுறும்பு பகுதியில் விளைந்த இள நுங்குகள் தற்போது காளாஞ்சிபட்டி தனியார் பள்ளி அருகில் விற்பனைக்கு வந்துள்ளது.

வியாபாரி வேலுச்சாமி கூறுகையில்,"" இன்னும் சீசன் தொடங்க 10 நாட்களுக்கு மேல் ஆகும். தற்போது வந்துள்ள நுங்கை பிரித்தெடுக்க முடியாது. சீவி அப்படியேசாப்பிட வேண்டும். நடுத்தரமான நுங்கு காய் ஒன்றின் விலை ரூ.10 க்கு விற்கிறேன்'', என்றார்.

## விளைச்சல் அமோகம் விலை குறைவு

வத்தலக்குண்டு:விருவீடு பகுதியில் பந்தல் விவசாயத்தில் பெரும்பாலோர் ஈடுபட்டுள்ளனர். பாகல், அவரை, புடலை, பீர்க்கு ஆகிய பந்தல் காய்கறிகள் இப்பகுதியில் விளைவிக்கப்படுகிறது.

அதிக பரப்பளவில் பயிரிடுவதால் கும்பகோணம், சென்னைக்கு கொண்டு செல்லப்படுகிறது. கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மழை இல்லாததால் பந்தல் விவசாய பரப்பளவு குறைந்து விட்டது.விவசாயிகளும் தண்ணீர் பாசனம் உள்ள இடங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டனர். ஜனவரியில் கிலோ ரூ. 30, 40க்கு விற்ற அவரை,

இம்மாதம் கிலோ ரூ. 10, 15க்கு உள்ளூர் வியாபாரிகளுக்கு விற்று வருகின்றனர். வடக்கு வலையபட்டி விவசாயி பெரிச்சி கூறுகையில், " மழையை நம்பித்தான் விவசாயிகள் உள்ளனர். வரப்பிரசாதமாக 58 கிராம கால்வாய் திட்டம் கிடைத்தும், பாதியில் நின்றுள்ளதால் கண்மாய்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் கிணறுகள் வறண்டு விட்டன. கால்வாய் பணியை துரிதப்படுத்த வேண்டும்" என்றார்.

## செவ்வந்தி பூ சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

செந்துறை:செந்துறை பகுதியை சேர்ந்த விவசாயிகள் செவ்வந்தி பூ சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மணக்காட்டூர், குடகிப்பட்டி, பிள்ளØயார்நத்தம், கோட்டைப்பட்டி, மேற்கிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் செவ்வந்தி பூ அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

முதிர்ந்த செடிகளின் வேர்களை சிறு துண்டுகளாக வெட்டி நடவு செய்ய வேண்டும். நடவு செய்ததில் இருந்து நான்கு மாதங்களில் பலன் கொடுக்க துவங்கிவிடும். 70 நாட்களுக்கு பலன் கிடைக்கும். இப்பகுதியில் போதிய மழை இல்லாததால் பாசனத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது. செவ்வந்தி செடிக்கு சீரான தண்ணீர் பாய்ச்சினாலே போதுமானது. வறட்சியான

சூழலுக்கு ஏற்ற பயிராக Öச்வவந்தி விளங்குவதால் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மணக்காட்டூர் பிள்ளயார்நத்தம் பகுதிகளில் விளையும் பூக்களை மதுரை மார்க்கெட்டிலும் மேற்கிபட்டி, குடகிப்பட்டி பகுதிகளில் விளையும் பூக்களை திண்டுக்கல் மார்க்கெட்டிலும் விற்பனை செய்கின்றனர்.

## கோமாரி தடுப்பு முகாம்

க.பரமத்தி: சின்னதாராபுரம் பகுதியில், கோமாரி தடுப்பூசி முகாம் நடந்தது. க.பரமத்தி அடுத்த, சின்னதாராபுரம் கால்நடை மருத்துவமனை சார்பில், ராஜபுரம் மற்றும் புளியம்பட்டி ஆகிய பகுதியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. கால்நடை டாக்டர் மோகன்ராஜ், விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு குறித்தும், பராமரிப்பு குறித்தும்

பேசினார். பின், அப்பகுதி கால்நடைகளுக்கு, கோமாரி தடுப்பூசி போடப்பட்டது. முகாமில், கால்நடை ஆய்வாளர் ஜானகி, உதவியாளர் மரியஉபகாரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பயிர் விளைச்சல் பாதிக்க வாய்ப்பு

போடி: மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் மானாவாரி பயிர் விளைச்சல் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது.

மாவட்டத்தில் ஆண்டு தோறும் சராசரியாக ஜனவரியில் 29.8 மி.மீ., பிப்ரவரியில் 24.1 மி.மீ., மழை பெய்யும். ஆனால் இந்தாண்டு மழையில்லாமல் வெயில் சுட்டெரித்து வருகிறது. நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி மற்றும் தோட்டப்பயிர்கள் பல ஆயிரம் ஏக்கர் கணக்கில் பயிரிடப்பட்டுள்ளன. இவை வளர்ச்சி பருவத்தில் இருந்தும், மழையில்லை. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து நிலங்களும் வறண்டு காணப்படுகின்றன. மழை இல்லாததால் இந்தாண்டு பயிர்களின் விளைச்சல் குறைய வாய்ப்புள்ளது, என விவசாயிகள் தெரிவித்தனர்.

## வேளாண்துறை ஆணையர் ஆய்வு

ஆண்டிபட்டி: டி.பொம்மிநாயக்கன்பட்டியில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தில் செயல்படுத்தப்படும் பணிகள் குறித்து வேளாண்துறை ஆணையர் ராஜேந்திரன் ஆய்வு செய்தார்.

பயிர்வளர்ப்பு, கால்நடைகள் வளர்ப்பிற்கு , விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மானியம் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதா என கேட்டறிந்தார். ÷வளாண்மை உதவி இயக்குனர் தியாகராஜன், உதவி வேளாண்மை அலுவலர் முருகன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வேளாண் விரிவாக்க மையம் இடமாற்றம்

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டியில், புதிதாக கட்டப்பட்ட கட்டடத்தில், வட்டார வேளாண் விரிவாக்க மைய அலுவலகத்தை, அதிகாரிகள், ரகசியமாக இடமாற்றம் செய்தனர். சேலம்,

பனமரத்துப்பட்டி பஞ்., யூனியன் வளாகத்தில், பாழடைந்த கட்டடத்தில் செயல்பட்டு வந்த, வட்டார வேளாண் விரிவாக்க மைய அலுவலகம், அலுவலர் குடியிருப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. பழைய கட்டடத்தை இடித்து விட்டு, அந்த இடத்தில், பல லட்சம் ரூபாய் மதிப்பில், புதிய அடுக்குமாடி கட்டடம் கட்டப்பட்டது. சட்டசபை தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன், புதிய கட்டட திறப்பு விழா நடக்கவில்லை. புதிய கட்டடத்திற்கு, வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை இடமாற்றம் செய்ய, அதிகாரிகள் முடிவு செய்தனர். அலுவலர் குடியிருப்பில் இருந்த, சேர், டேபிள், ஆவணங்கள், விதைகள் உள்ளிட்டவைகளை, நாள் தோறும் கொஞ்சம், கொஞ்சமாக, புதிய கட்டடத்திற்கு எடுத்து வந்தனர். நேற்று, அங்கிருந்த எல்லா பொருள்களையும் புதிய கட்டடத்திற்கு இடமாற்றம் செய்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கொப்பரை தேங்காய் விலை கடும் வீழ்ச்சி இளநீர் விற்பனைக்கு மாறும் விவசாயிகள்

ஈரோடு, : கொப்பரை தேங்காய் விலை தொடர்ந்து சரிந்து வருவதால் தென்னை விவசாயிகள் இளநீர் விற்பனைக்கு மாறி வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் கோபி, சத்தி, மொடக்குறிச்சி, பவானி உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் தென்னை மரங்கள் உள்ளன. கடந்த ஆண்டில் கொப்பரை விலை கிலோ ரூ.100 வரை விற்பனையாகி வந்த நிலையில் மெல்ல சரிந்து வந்த நிலையில் தற்போது கொப்பரை தேங்காய் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் ரூ.51க்கு விற்பனையாகி வருகிறது. இது விவசாயிகளை அதிர்ச்சியடையச்செய்துள்ளது.

ஈரோடு மாவட்ட தென்னை விவசாயிகளுக்கான ஒழுங்குமுறை விற்பனை கூடம் அவல்பூந்துறையில் செயல்பட்டு வருகிறது. இந்த

விற்பனை கூடத்திற்கு மொடக்குறிச்சி மற்றும் அரச்சலூர் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். கடந்த வார விலை நிலவரப்படி முதல் தரக் கொப்பரை அதிகபட்ச விலையாக கிலோவுக்கு ரூ.51.65க்கும், குறைந்தபட்ச விலை ரூ.49.05க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்ச விலை கிலோவுக்கு ரூ.50.05க்கும், குறைந்தபட்ச விலை ரூ.38.85க்கும் விற்பனையானது.

இதே போல தேங்காய் ஒன்று அதிகபட்சம் ரூ.6.30 வரை ஏலம் போனது. வரும் மே மாதம் வரை தேங்காய் வரத்து அதிகரிக்கும் என்பதால் மேலும் விலை சரிய வாய்ப்பு உள்ளதால் இளநீர் விற்பனைக்கு அனுப்ப விவசாயிகள் முடிவு செய்துள்ளனர்.

இது குறித்து விவசாயிகள் தரப்பில் கூறியதாவது: கொப்பரை தேங்காய் விலை தொடர்ந்து சரிந்து வருகிறது. வரும் மாதங்களில் சீசன் என்பதால் வரத்து மேலும் அதிகரிக்கும்.எனவே, தற்போது கோடை வெயில் காரணமாக இளநீர் விற்பனை சூடுபிடிக்க தொடங்கி உள்ளது. எனவே இளநீர்க்கு விற்பனைக்கு விட விவசாயிகள் முன்வந்துள்ளனர். ஒரு இளநீர் ரூ.12 முதல் ரூ.15 வரை விலைக்கு வாங்கிச் செல்கின்றனர். கொப்பரை மற்றும் தேங்காய்யுடன் ஒப்பிடுகையில் இளநீர் விலை ஓரளவு கட்டுப்படியாகின்றது. இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

**வெயிலால் நுங்கு விற்பனை ஜோர்**

திருப்பூர், : திருப்பூரில் கடந்த சில வாரங்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. அதனால், நகரப் பகுதிகளில் பகலில் சாலைகளில் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்படுகிறது. வெயில் கடுமையிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ள தர்பூசணி, வெள்ளரி, பழரசத்தை மக்கள் நாடத் துவங்கியுள்ளனர். தற்போது, கோடை வெயிலுக்கு இதமளிக்கும் வகையில் நுங்கும் விற்பனைக்கு வர துவங்கியுள்ளது. நுங்கு சீசன் துவக்கம் முதலே, அதன் வரத்து மிகுந்திருப்பதால் விற்பனை களைகட்டத் துவங்கியுள்ளது.

10 ரூபாய்க்கு 3 முதல் 5 நுங்கு வரை தரப்படுகிறது. இந்தாண்டு நுங்கு

விளைச்சல் நன்கு இருப்பதால், வரும் வாரங்களில், அதன் விலை குறையும் என நுங்கு விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர். மார்ச் தொடக்கத்தில் இருந்து ஜூன் வரை நுங்கு வரத்து இருக்கும். தாகத்தை தணிப்பதோடு உடல் சூட்டையும் சீராக்கும் என்பதால் நுங்கை மக்கள் அதிகம் விரும்பி சாப்பிடுகின்றனர்.

## வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி

உடுமலை, : குடிமங்கலம் வட்டார கால்நடைத் துறை சார்பில் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு வெள்ளாடு, கறவை மாடு வளர்ப்பு குறித்த பயிற்சி குடிமங்கலம் கிராமத்தில் நடந்தது.

வெள்ளாடு, கறவை மாடு வளர்ப்பு மற்றும் பராமரிப்பு முறை குறித்து கால்நடை உதவி இயக்குனர் டாக்டர் அன்வர்தீன் விளக்கம் அளித்தார். இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் மகாலிங்கம், குடிமங்கலம் கால்நடை மருந்துவர் ரவி ஆகியோர் பேசினர். 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் இதில் பங்கேற்றனர்.

முடிவில், வட்டார தொழில்நுட்ப மேலாளர் கோபிநாத் நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை குடிமங்கலம் உதவி தொழில்நுட்ப மேலாளர் மனோஜ்குமார் செய்திருந்தார். பயறு வகை பயிர்களில் பண்ணைப்பள்ளி பயிற்சி கொங்கல்நகரம் கிராமத்தில் நடந்தது. வாணவராயர் வேளாண் கல்லூரி பேராசிரியர் பால்ராஜ் இதில் கலந்து கொண்டு பயறு வகைப் பயிரில் உரமேலாண்மை, பூச்சிக்கொல்லி மேலாண்மை குறித்து விளக்கம் அளித்தார்.

தரமான விதை உற்பத்தி மற்றும் விதைச்சான்று குறித்து விதைச்சான்று அலுவலர் இளங்கோ பேசினார். அரசின் மானிய திட்டங்கள் குறித்து வேளாண்மை அலுவலர் வசந்தா விளக்கினார். 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் இதில் பங்கேற்றனர். உதவி வேளாண்மை அலுவலர் கோதண்டபாணி நன்றி கூறினார்.

**மிளகாய் பழங்களை நாசம் செய்யும் பறவைகளை விரட்ட விவசாயிகள் புது உத்தி**

ஆர்.எஸ். மங்கலம் : ஆர்.எஸ். மங்கலம் பகுதியில் மிளகாய் பழங்களை பறவைகளிடமிருந்து பாதுகாக்க வயல்களில் விவசாயிகள் நூதன உத்தியைக் கையாண்டுள்ளனர்.ஆர்.எஸ்.மங்கலம், செங்குடி, பூலாங்குடி, வண்டல், வரவணி உள்ளிட்ட பகுதிகளில் தற்போது மிளகாய் விவசாயம் மும்மரமாக நடந்து வருகிறது. மிளகாய் பழம் பழுத்துள்ளதால் அதிகளவில் வயல்வெளிகளுக்கு பறவைகள் தேடி வருகின்றன. பறவைகள் செடிகளில் உள்ள பழங்களை கொத்துவதால் அவை உதிர்ந்து விடுகின்றன. இது விவசாயிகளுக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்துகிறது.

இதைத் தடுக்கும் விதமாக பறவைகளிடமிருந்து மிளகாயைப் பாதுகாக்கும் வகையில் வயலின் வெளிப்பகுதியிலும், அதைச் சுற்றிலும் சாக்கு, பாலிதீன் பை, சேலைமற்றும் வேட்டிகளை கிழித்து கொடியாக கட்டி வைத்துள்ளனர். இதைப் பார்க்கும் பறவைகள் வயல்களுக்கு வருவதில்லை. பறவைகளை விரட்ட விவசாயிகள் புது உத்தியைக் கையாண்டு வருகின்றனர்.

இது குறித்து விவசாயி ஆறுமுகம் கூறுகையில், “மிளகாய் பழுத்ததும் வயல்களுக்கு கிளி, காகம், மயில் போன்ற பறவை கள் அதிகளவில் வருகின்றன. மிளகாய் செடிகளை நாசம் செய்வதோடு பழங்களையும் உதிர்த்து விடுகின்றன. இத னால் பெரும் நஷ்டம்ஏற்படுகிறது. இதைத் தடுக்கவும் பறவைகளை விரட்டவும் வயல்களைச் சுற்றிலும் வேட்டி, சேலை போன் றவற்றை கட்டி வைத்துள்ளோம். இதன் மூலம் பறவைகளை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடிகிறது” என்றார்.

## மருத்துவ குணம் வாய்ந்தது வெளிமாநிலங்களுக்கு செல்லும் பண்பொழி காட்டுநெல்லி உலர வைக்கும் பணி தீவிரம்

செங்கோட்டை, : வெளிமாநிலங்களுக்கு செல்லும் மருத்துவ குணம் வாய்ந்த காட்டு நெல்லி பண்பொழியில் உலர வைக்கும் நடந்து வருகிறது. நெல்லிக்காயில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று அரி நெல்லிக்காய் எனப்படும் நம் வீட்டு தோட்டங்களில் பயிரடப்பட்டு மரமாக வளர்ந்து மிகவும் சுவையுடன் கூடிய நெல்லிக்காய்களை கோடைக்காலம் முழுவதும் தரக்கூடிய வீட்டு நெல்லி. மற்றொன்று தோப்பு அல்லது காட்டு நெல்லிக்காய் எனும் பெரிய அளவிலான பச்சை நெல்லிக்காய், இருவகை நெல்லிக்காயும் உவர்ப்பும் புளிப்பும் சேர்ந்தது..

இதில் காட்டு நெல்லியை நன்கு வெயிலில் காய வைத்து நன்கு உலர்ந்த்தும் அதிலுள்ல கொட்டைகள் தானாக நீங்கி விடும், இந்த காய்ந்த நெல்லிநெல்லி பொடி தயாரிக்கவும்,மருந்து பொருட்கலுக்கு பயம்படுத்துவதற்கும், கிலோ ரூ.30க்கு கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற வெளி மாநிலங்களுக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

நெல்லி நீர்ச்சத்தும், மருத்துவ குணமும் கொண்டது. இதனால் பற்களும் ஈறுகளும் பலப்படுவதோடு, வாய் துர்நாற்றமும் நீங்கும். கணைச்சூட்டால் அவதியுறும் குழந்தைகளுக்கு நெல்லிக்காயை சாறாகப் பிழிந்து கொடுக்க நல்ல பலனளிக்கும். உடல் அசதி மற்றும் அஜீரண கோளாறுகளுக்கு இது கைகண்ட மருந்தாகும். ரத்தத்தில் வெள்ளை அணுக்கள் உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கிறது.